சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 10/2021

பெயர் திரு. ஆனந்தன் த/பெ. பாலகிருஷ்ணன் நாள். 20.06.2025

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தகப்பனாரின் கையொப்பம் இல்லாமல் அவருடைய பங்காளிகள் சொத்துக்களை விற்றுவிட்டதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தகப்பனார் பெயர் பாலகிருஷ்ணன். அந்த பங்காளிகள் பெயர் என்னவென்றால் ஏகாம்பரம், பொன்னன் மற்ற இருவர் இறந்துவிட்டனர். வழக்குச் சொத்தின் புல எண். 287/21பி. அதன் விஸ்தீரணம் 2 ஏக்கர் 40 சென்ட். வழக்குச் சொத்து எங்கள் தாத்தா எல்லப்பனின் பூர்வீக சொத்தாகும். சின்னையன் மற்றும் என் தாத்தா எல்லப்பனுக்கும் இடையே என்ன உறவு என்றால் பங்காளிகள். நான் வழக்கு தாக்கல் செய்திருப்பது 50 சென்ட்டுக்கு. எல்லப்பனும், சின்னையனும் சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்த அனுபவித்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சின்னையனும், அவரது வாரிசுகளும் 1998 ம் ஆண்டு 1ம் பிரதிவாதிக்கு வழக்குச் சொத்தை கிரயம் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரய ஆவணம் முறையாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்குச் சொத்திற்கு பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் மாற்றப்பட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு மாற்றிவிட்டார்கள்.

2) 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணம் பற்றி எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் 2019ல் தெரியவந்தது. அந்த கிரய ஆவணத்தை எதிர்த்து எந்தவித ஆட்சேபனையோ, வழக்கோ தொடரவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் தெரியவந்தது என்ற விவரத்தை என் முதல் விசாரணை வாக்கமூலம் மற்றும வழக்குரையில் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றாலும்,

வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. காலவரையறை சட்டத்தின் கீழ் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1998 முதல் 1ம் பிரதிவாதிதான் அனுபவம் செய்துள்ளார் என்றாலும், அதற்கான ஆவணங்களை அவர் வைத்துள்ளார் என்றாலும் சரியல்ல. நாங்கள் எந்த வருடத்தில் இருந்து பயிர் வைத்துள்ளோம் என்றால் எங்கள் தாத்தா காலத்தில் இருந்து பயிர் வைத்துள்ளோம். வழக்குச் சொத்தை என் பாட்டனாரோ அல்லது என் தந்தையோ அனுபவம் செய்யவில்லை என்றாலும், வழக்குச் சொத்தை அபகரிக்க என் தந்தை இறந்த பிறகு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) வழக்குச் சொத்தின் நான்கு எல்லைகள் கிழக்கே சின்னையன், மேற்கே ஓடை, வடக்கே நடராஜன், தெற்கே 1ம் பிரதிவாதி உள்ளார்கள். மேற்சொன்ன நான்கு எல்லைகள் தவறு என்றாலும், வழக்குச் சொத்தின் அனுபவத்தில் நான் இல்லை என்பதால்தான் தவறான நான்கு எல்லைகளை கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தை ரத்து செய்யக்கோரும் பரிகாரத்திற்கு எவ்வித காரணமும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளன கிரய ஆவணம் உரிய மறுபயன் உள்ளது என்றாலும், அதை நான் ரத்து செய்ய பரிகாரம் கோர இயலாது என்று சொன்னாலும் சரியல்ல.

4) வழக்குச் சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், அதனால் நிரந்தர உறுத்துக் கட்டளை கோர இயலாது என்றாலும் சரியல்ல. விளம்புகை பரிகாரமும் என்னால் கோர இயலாது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை நானும், என் தகப்பனாரும் அனுபவம் செய்து வந்தோம் என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2 ஏக்கர 40 சென்ட்டில் 69 சென்ட்டை என் தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துவிட்டார். அதன் விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார்

1994ம் ஆண்டு அவ்வாறு கிரயம் கொடுத்தார். 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள 2 கிரய ஆவணங்களின் படி மொத்த சொத்தையும் அவர்தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு, அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.